# ‘‘சொல்லதில் கூறுவீர், வாழ்வதில் சாதிப்பீர்!’’

*லில்லியன் ஸ்டான்லி*

அசத்தலாய்பேசி அட்டகாசமாக எழுதும் பலரையும் தொலைநோக்கியில் பார்க்கையில் அபாரமாகத்தான் இருக்கிறது. ஆனால் அண்மையில் பார்த்தால் நமது பொற்சிலைகளின் கால்கள் வெறும் களிமண்தான் என்று கண்டு அதிர்வோம். ஆனால் தன்னிகரற்ற ஒருவர் மலையொன்றின் மேல் மலைக்க வைக்கும் பிரசங்கம் ஒன்றைச் செய்துவிட்டு கீழே இறங்கி வந்து, தமது வாயால் சொல்லியதை வாழ்க்கையில் செய்து காட்டியதைக் காணலாம்.

தான் பிரசங்கித்ததைக் கடைப்பிடிப்பது இயேசுவிற்கு சுலபமாயில்லை. அவரது திறமையைச் சோதித்த பல சூழ்நிலைகளைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது. ஆனாலும் அவர் *சொல்லிலும் செயலிலும்* வல்ல இறைவாக்கினராகத் திகழ்ந்தார் (லூக் 24:19). அவரது செய்தியை வாசிக்கும் முன்பாக மக்கள் அவரை வாசித்தனர். அவரது வாழ்க்கையின் ஒவ்வொரு நாளும் அவரது செய்தி குறிப்புகளின் ஒரு புதிய பக்கமாயிருந்தது. சில எடுத்துக் காட்டுகளை மட்டும் பார்ப்போம்.

## *1. தாழ்மை*

இயேசு தாழ்மையை வலியுறுத்தி, அப்படிப்பட்டவர்கள் உயர்த்தப்படுவர் என்றார் (மத் 5:3,5) தாழ்மை குறித்து தாற்பரியம் பேசலாம்; தாழ் பணிந்து போக முடியுமா? இயேசுவுக்கும் கடினமான பயிற்சிதான். ஏனெனில் அவர் தொட்டாலும் பட்டாலும் அவரது விரோதிகள் அவரைக் குற்றஞ்சாட்டிக் கொண்டே இருந்தனர். முடக்கு வாதமுற்றவரிடம் இயேசு, ‘‘உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன,’’ என்றபோது, மறைநூல் அறிஞர் சிலர், ‘‘இவன் கடவுளைப் பழிக்கிறான்,’’ என்று தமக்குள் எண்ணினர். அவர் கடவுளாய் இருந்தும், கோபமாய் அவர்களைத் திட்டாமல், இறைமைந்தனாகியத் தமக்குப் பாவங்களை மன்னிக்க அதிகாரம் உண்டு என்று பொறுமையாய் விளக்கினார் (மத் 9:2-8).

‘‘மனிதராய்ப் பிறந்தவர்களுள் திருமுழுக்கு யோவானை விடப் பெரியவர் எவரும் தோன்றியதில்லை,’’ என்று மக்களுக்கு முன்பாக அவரைத் தன்னைக் காட்டிலும் உயர்த்திக் கூறினார் (மத் 11:11). ‘‘நான் கனிவும் மனத் தாழ்மையும் உடை யவன்,’’ என்றார் (வச 29). பரிசேயர் அவரைத் தீர்த்துக்கட்டத் திட்டம் தீட்டிய போது அவர் எதிர்ச்செயல் புரியாமல், அமைதியாய் அவ்விடம் விட்டகன்றார் (12:14,15). ‘‘ஊழியன்’’ அல்லது ‘வேலைக்காரன்’ என்றழைக்கப்பட்டார் (வச 18). சீடர்களின் கால்களைக் குனிந்து கழுவினார்.

இயேசு கடவுளுக்கு நிகராயிருந்தாலும் அதைப் பெரிதுபடுத்தாமல் மன்னுருவானார் (பிலி 2:6-8). அவருடையத் தாய்மண்ணில் அவரது ஞானத்தைக் கேட்டவர்கள் மூக்கின் மேல் விரல் வைத்து, ‘‘எங்கிருந்து இவனுக்கு இவ்வளவு ஞானம் வந்தது?’’ என்று வியந்தாலும், அடுத்த மூச்சிலேயே, ‘‘இவன் தச்சன் மகன்தானே, நம்மில் ஒருவன்தானே,’’ என்று மண் அள்ளிப் போட்டனர் (மத் 13:53-57). சுய பரிதாபத்திற்கு ஆளாகாமல், இயேசு, அவ்விடம் விட்டகன்றார். எல்லாவற்றிற்கும் மேலாக, அவருடையத் தாழ்மையைக் குறித்து சாட்சி கொடுப்பது சிலுவைப் பயணத்தில் அவர் பட்டப்பாடுகளே.

கிறிஸ்துவின் தாழ்மைக்கு அவருக்கு கிடைத்த பரிசு என்ன? மலைப் பிரசங்கத்தில் சொல்லியபடி விண்ணரசும் தாய்நாடுமா? (மத் 5:3,5). திருமறை சொல்வதைக் கேளுங்கள்: ‘‘உலகின் ஆட்சி உரிமை நம் ஆண்டவருக்கும் அவருடைய மேசியாவுக்கும் உரியதாயிற்று. அவரே என்றென்றும் ஆட்சி புரிவார்’’ (வெளி 11:15). அல்லேலூயா! கடவுள் அவரை உயர்த்தினார் (பிலி 2:6-8).

நம்மையே வெறுத்து நமது சிலுவையைச் சுமந்து அவரது அடிச்சுவடுகளில் வருமாறு இயேசு பணித்தார் (மத் 16:24). கல்வாரிக் காட்சிகள் நமது மனத்திரையில் ஓடட்டும். தாழ்மை குறித்து பிரசங்க பீடத்தைக் குத்திப் பேசுவதோடு நின்றுவிடாமல், எசேக்கியாவைப் போல பணிவுடன் நடக்கப் பயில்வோம் (2 நாளா 32:26).

## *2. உலகின் ஒளி*

நாமே இவ்வுலகிற்கு ஒளி என்றார் இயேசு. நமது ஒளி மறைந்திராமல் இருளில் ஒளிவீசும் கலங்கரை விளக்காய் மனிதர் முன் ஒளிர வேண்டுமாம். அப்போது அவர்கள் அதைக் கண்டு விண்ணகத் தந்தையைப் போற்ற வேண்டுமாம் (மத் 5:14-16). இதை இயேசு எப்படிப் பயிற்சித்தார்? லூக்கா 7:16; மத்தேயு 9:8இல், இயேசு செய்ததை மக்கள் கண்டு இறைவனைப் போற்றியதாக வாசிக்கிறோம்.

இருளிலும் மரண நிழலிலும் வாழ்ந்தவருக்கு இயேசு பேரொளியாய் வந்தார் என்று வாசிக்கிறோம் (மத் 4:16). ஆன்மீக இருள் சூழ்ந்த கலிலேயாவில் அதிகமாகப் புறவினத்தவரே வாழ்ந்தனர். இயேசுவின் வாழ்க்கை அவர்களுக்கு ஒளியாய் அமைந்தது (யோவா 1:4,5). அவரது பரிசுத்தமும் தூய்மையும் அந்தகாரத்தை அகற்றின. ஊழலில் ஊறிப்போயிருந்த அவர்களது மனச்சான்று விழிக்கத் துவங்கியது. அவரைக் குறித்த யோவானின் சாட்சி, தனிப்பட்டவருக்கும் அவரது ஒளிவீசும் என்று அறைகூவிற்று (வச 9). சத்தியத்தை விரும்பினவர்கள் அந்த ஒளியினிடம் ஓடிவந்தனர் (யோவா 3:19-21).

‘‘உலகின் ஒளி நானே; என்னைப் பின்தொடர்பவர் இருளில் நடக்கமாட்டார்; வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளியைக் கண்டிருப்பார்,’’ என்று பறை சாற்றினார் இயேசு (யோவா 8:12). அவர் சொன்னபடியே ஒளி வீசி மக்களுக்கு விண்ணுலகையும் தமது பரம தந்தையையும் அடைய வழிகாட்டினார். அவர் உலகில் இருந்த மட்டும் உலகிற்கு ஒளியாயிருந்தார். ‘‘என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இருளில் இராதபடி நான் ஒளியாக உலகிற்கு வந்தேன்,’’ என்றார் (வச 46).

இயேசு கொலை செய்யப்பட்டபோது அந்தகாரம் உலகைக் கௌவிற்று. இப்போது என்ன? ‘‘நீங்களே உலகிற்கு ஒளி’’ என்று இயேசு சொன்னதை நினைவு கூர்வோம் (மத் 5:14). இருள் சூழ்ந்த இவ்வுலகில் மக்களுக்கு வழிகாட்ட நாமே ஒளி. ‘‘உலகம் முழுவதும் என் மீட்பை அடைவதற்கு நான் உன்னை வேற்றினத்தார்க்கு ஒளியாக ஏற்படுத்துவேன்,’’ என்றார் இயேசு (அப் 13:47). உலகமெங்கும் போங்கள் என்று ஏற்கெனவே தம் சீடருக்குப் பணித்திருந்தார் (மாற் 16:15). எனவே உலகிற்கு ஒளி கொடுப்பது இப்போது நம் கடமையாகும். அவருக்காகப் பிரகாசிக்கிறோமா அல்லது என் வேலை என் ஜோலி என்று இருக்கிறோமா?

மாற்றுத்திறனாளி ஒருவரை பேதுருவும் யோவானும் குணமாக்கியதைக் கண்ட மக்கள் அனைவரும் கடவுளைப் போற்றிப் புகழ்ந்தனர் (4:21). கொர்நேலியு வீட்டில் நடந்ததை திருத்தூதுவருக்குப் பேதுரு விவரித்தபோது அவர்கள் கடவுளைப் போற்றிப் புகழ்ந்தனர் (11:18).

இருளில் இருப்போர்க்கு ஒளி நாமன்றோ (ரோ 2:19). நற்செய்தியின் ஒளியைக் காண முடியாதபடி, இவ்வுலகின் தெய்வம் நம்பிக்கை கொண்டிராதோரின் அறிவுக் கண்களைக் குருடாக்கிவிட்டதை உங்களைச் சுற்றிலும் காண்கிறீர்களே (2 கொரி 4:4-6). பிற இனத்தவரின் கண்களைத் திறந்து அவர்களை இருளிலிருந்து ஒளிக்குள் கொண்டுவர பவுல் அனுப்பப்பட்டார் (அப் 26:18). பவுலை அனுப்பின இறைவன் இப்போது இவர்கள் கண்களைத் திறக்கும்படி நம்மை அனுப்புகிறார். மேடைப் பிரசங்கம் போதாது, மக்களிடம் சென்று ஒளிவீசுவோம். சொல்லதில் கூறுவதை வாழ்வதில் சாதிப்போம்!

## *3. ஜெபம்*

எவ்விதக் கவனச் சிதறலுமின்றி ஆண்டவரோடு ஆழ்ந்த உறவாடலில் ஈடுபட தனிமையான இடத்தைத் தேடிச் செல்ல மலைப்பிரசங்கத்தில் கர்த்தர் தம் சீடருக்குக் கற்பித்தார். வீண் அலப்பலின்றி இதயப் பூர்வமாக எளிமையாக உள்ளத்தை ஊற்றி ஜெபிக்கக் கற்பித்தார். இதை அவருமே கடைபிடித்தார். அவரது ஊழியம் வனாந்தரத்தில் ஜெபத்தில் துவங்கி, சிலுவையில் ஜெபத்தில் முடிந்தது (மத் 4:1,2; லூக் 23:46).

மாற்கு கூறுகிறார்: “இயேசு விடியற் காலை கருக்கலில் எழுந்து தனிமையான ஓர் இடத்திற்குப் புறப்பட்டுச் சென்றார், அங்கே அவர் இறைவனிடம் வேண்டிக்கொண்டிருந்தார்” (1:35). நமக்குப் போதித்ததை அவரே கடைபிடித்தார். கூட்டத்தை அனுப்பிவிட்டு தனித்து ஜெபிக்கச் செல்வார் (மத் 14:23; லூக் 6:12). அவருடைய வார்த்தைகளைவிட அவருடைய வாழ்க்கை அவரது சீடரை அதிகமாகப் பாதித்தது. ஒருமுறை, அவரை ஜெபிக்கக் கண்ட சீடர் ஒருவர், தங்களுக்கும் ஜெபிக்கக் கற்பிக்கும்படி வேண்டினார் (லூக் 11:1). அவரது ஜெபவாழ்வு அவர்களையும் அப்படியே ஜெபிக்கத் தூண்டியது.

மறைவில் ஜெபித்த இயேசுவைக் கண்ட தகப்பன் வெளிப்படையாய் பதிலளித்தார் (மத் 6:6). இயேசு திருமுழுக்குப் பெற்று ஜெபித்துக் கொண்டே தண்ணீரிலிருந்து வெளிவந்த போது, வானம் திறந்து ஆவியானவர் புறாவைப்போல அவர்மேல் இறங்கினார். வானத்திலிருந்து, “என் அன்பார்ந்த மகன் நீயே, உன் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்” என்று தந்தை உரைத்தார் (லூக் 3:21,22). இன்னொரு தருணத்தில் இயேசு ஜெபித்தபோது, இடிமுழக்கத்தைப்போல ஒரு சத்தம் வானத்திலிருந்து, “மாட்சிப்படுத்தினேன், மீண்டும் மாட்சிப்படுத்துவேன்,” என்று ஒலித்தது (யோவா 12:29). கெத்செமனேயில் அவர் வேதனையில் ஜெபித்தபோது, தேவதூதன் ஒருவன் தோன்றி அவரை பலப்படுத்தினான். இயேசுவின் ஜெபங்களுக்குக் கிடைத்த அற்புத பதில்களை நற்செய்தி நூல்களில் காணலாம்.

நம்மைத் துன்புறுத்துகிறவர்களுக்காக இயேசு ஜெபிக்கக் கற்பித்தார். சிலுவையில் தொங்கும்போது, தகப்பனை நோக்கி,

தன்னைத் துன்புறுத்துகிறவர்களுக்காக, ‘‘தந்தையே, இவர்களை மன்னியும், தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை,’’ என்றார் (லூக் 23:34). ஜெபிக்கும்போது மன்னிக்க வேண்டும் என்று போதித்தாரே (மாற் 11:25). ஜெபிக்க முடியாத அளவு அவர் அலுவலாயில்லை. லூக்கா 5:16இல் ‘‘அவரோ’’ என்பதை கவனிக்க. அவரைக் கேட்கவும், சுகம் பெற வும் கூட்டம் அவரை நெருக்கித் தள்ளிற்று. ‘‘அவரோ’’ ஆள்நடமாட்டம் இல்லாத இடங் களுக்குச் சென்று தனித்திருந்து இறைவனி டம் வேண்டிவந்தார். இரவு முழுதும்கூட ஜெபத்தில் செலவிடுவார் (லூக் 6:12). தோற்றம் மாறுவதற்காக அவர் மலையேறிச் செல்ல வில்லை; ஜெபிக்கச் சென்றபோது மறுரூப மானார் (9:28,29).

நாம் சோர்ந்துபோகாமல் ஜெபிக்க வேண்டுமென்றுப் போதித்தார் (லூக் 18:1). வாழ்க்கையில் அவர் பட்ட அலசடிகளினால் சோர்ந்துபோய் ஜெபிப்பதை அவர் நிறுத்தி யிருக்க வேண்டியது. அவரோ, தகப்பன் தன்னைக் கைவிட்ட நேரத்திலும் அவரையே நோக்கிக் கூப்பிட்டார்.

நமது சுருக்க ஜெபத்தை தூர தூக்கி வைத்து விட்டு ஆண்டவரோடு தனித்து மனம் விட்டு மனம் உறவாடப் பயில்வோம். ஜெபிக்க உதவி செய்யும் ஆண்டவா, என்று முதலில் கேளுங்கள். பின் அவரோடு பேசுவதில் கவனம் செலுத்துங்கள். உரக்க ஜெபிக்க வசதியிருந் தால் ஜெபியுங்கள். மனதில் வருவதையெல் லாம் ஊற்றுங்கள். நள்ளிரவில் விழிப்புத் தட்டி தூங்க முடியாமல் போனால் படுக்கையில் உருண்டு நேரத்தை வீணாக்காதீர். ஜெபிக் கச் சிறந்த நேரம் இதுவே. உங்கள் வாழ்க் கை உருமாறும். பிலிப்பியர் 4:4-6இல் ‘‘எல்லா வற்றையும்’’ ஆண்டவரிடம் சொல்லப் பணிக்கப் பட்டிருக்கிறோம். நாம் வேண்டுதலைக் குறித்து பிரசங்கிக்கிறோம், வாசிக்கிறோம், எழுது கிறோம். ஆனால் அதை அப்பியாசிப்பதே சவால்!

ஜெபம் ஒரு கடுமையான ஆன்மீகக் கட்டுப் பாடு. இயேசு போதிக்க மட்டுமல்ல கடை பிடித்து நமக்கோர் உன்னத முன்மாதிரியை விட்டுச் சென்றுள்ளார்.

## 4. பணம்

இறையரசை நிறுவ சுலபமாயிருக்கும்படி யாக இயேசு ஓர் அரண்மனையில் யூதருக்கு அரசராகப் பிறக்கத் தெரிந்துகொண்டிருக் கலாம். அவர் தம்மை வெறுமையாக்கி அடிமைக் கோலமெடுத்தார். மாட்டுக்கொட்டகையில் பிறந்து தச்சன் வீட்டில் வளர்ந்தார். ஆனால் ஊழியத்திற்குப் பணம் வந்தபோது என்ன? பயணத்திற்கு ஒரு கழுதையையும், பிரசங்கத் திற்கு இரண்டு கூட்டும், தனக்கென்று வீடும் வேண்டுமே என எண்ணினாரா? யார் பட கையோ, யார் வீட்டையோ பயன்படுத்தினார். மக்களுக்குச் செய்த சேவைக்குப் பணம் வசூ லிக்கவில்லை. சம்பளம் வாக்குப்பண்ணி சீடரை அழைக்கவுமில்லை, ஆசைகாட்டவு மில்லை. மரித்தபோது அவருக்கு வங்கிக் கணக்கில்லை, சொத்துக்களில்லை, ஏன், ஒரு பெட்டி நிறைய பொருட்கள் கூட இல்லை! ஏழையாய் மரித்தார். காணிக்கைப் பணத் தை தானே கையாடாமல் வேறொருவர் பொறுப்பில் விட்டார். நமக்கும் அவருக்கும் என்ன சம்பந்தம்?

பணக்காரரல்ல, எளியவரே சுலபமாய் இறையரசை சுதந்தரிப்பர் என்று போதித்தார். தனது சொத்துக்களை விண்ணகத்தில் சேமித்தார். கடவுளையும் பணத்தையும் நேசிக்க முடியாது என்றுப் புகட்டினார் (மத்

5:24). நாம் கேட்கும் இன்றையப் போதனைகளுக்கும் பார்க்கும் காரியங்களுக்கும் அது எத்தனை மாறுபட்டது. முதல்வனாக விரும்பினால் கடையவனாக வேண்டும் என்றார். இறைமைந்தனே சேவை கொள்ள அல்ல, சேவை செய்யவே வந்தார் என்றார் (மாற் 10:43-45). பெற்றுக்கொள்வதல்ல, கொடுத்து விடுவதே ஆசீர்வாதம் எனக் கற்பித்தார் (அப் 20:35). விதவையின் விண்ணகச் சேமிப்பைக் கண்டதால் அவளைப் பாராட்டினார் (மாற் 12:43).

இயேசு பயணக் களைப்பினால் வாடி கிணற்றருகே உட்கார்ந்து ஹோட்டல் சாப்பாட்டிற்குக் காத்திருந்தார் (யோவா 4:6-8). சீகார் என்ற ஊரில் 2 நாட்கள் தங்கி, சமாரியருடன் சாப்பிட்டுத் தூங்கினார். இன்று எப்படி? செல்வர் விண்ணரசில் புகுவது கடினம் என்று உறுதியாகப் போதித்தார் (மத் 19:23). உலக அரசுகளின் மகிமைகளைப் பிசாசு காட்டி, தன் தாழ் பணிந்தால் எல்லாம் அவருக்கே என்றபோது அவனுக்கு முதுகைக் காட்டினார் (4:9). தனக்கு முன்னிருந்தக் கொடூரப் பாதையை எண்ணுங்கால் இது சிறிய தியாகமல்லவே! உலக அதிகாரத்தையும் மகிமையையும் உதறித் தள்ளி சிலுவைப் பாதையைத் தெரிந்து கொண்டார்.

மறைநூல் அறிஞரும் பரிசேயரும் பேராசையினால் "யாராவது திருக்கோவிலின் மேல் ஆணையிட்டால் ஒன்றுமில்லை; ஆனால் அவர் கோவிலின் பொன்மீது ஆணையிட்டால் அதை நிறைவேற்றக் கடமைப்பட்டவர்" என்று சொல்லி, பொருள் ஆதாயத்திற்காக மதச் சட்டங்களை திருக்கினர் (மத் 23:16). சொத்துக் குவிப்பவரை இயேசு முட்டாள்கள் என்றார் (லூக் 12:20). பணத்தைக் கொண்டு எல்லா சந்தோஷத்தையும் வாங்கலாம் என்று எண்ணி ஓட்டாண்டியாய்ப் போன ஒரு செலவாளியைக் குறித்து இயேசு பேசினார் (15:11-32). பணப்பிரியருக்கு இயேசுவின் எளிமை குறித்தப் போதனை விசித்ரமாயிருந்தது (16:14). அவர்களுக்கு பணக்காரன்-லாசருவின் கதையைச் சொன்னார் (வச 20-31). கேவலம், ஒரு கை நிறைய காசுக்காக இயேசுவைக் காட்டிக் கொடுத்த யூதாசுக்குக் கிடைத்ததென்ன?

பன்னிரெண்டு திருத்தூதுவரில் ஒருவரும் பணக்காரராகவில்லை. தனது செய்திகளுக்கு பவுல் பணம் வசூலிக்கவில்லை. மாறாக வேலை செய்து தன்னையும் பலவீனரையும் தாங்கினார். சம்பாதிப்பதற்காகவல்ல இறைப்பற்று என்று எச்சரித்தார் (1 தீமோ 6:5). உலகத்தை விட்டுச் செல்லும்போது என்னத்தை அள்ளிக் கொண்டு போகப் போகிறோம்? எனவே பணம், பணம் என்றும் பறக்காமல் எளிமையாக வாழ்வோம். வங்கியில் பணத்தைக் குவிக்காதீர்கள். பிள்ளைகளைப் படிக்கவைத்து, தன் காலிலேயே நிற்க விடுங்கள். நமது பணத்தை எளியவருக்கும், சேவைகளுக்கும் செலவழிப்போம். நமக்காகவே செலவழிப்பதைத் தவிர்ப்போம். ஒரு ரூபாய் செலவழிக்கு முன்பும் சிந்தியுங்கள். அந்த ஒரு ரூபாய்க்காய் ஏங்கும் உள்ளங்கள் உண்டே. இயேசுவைப்போல் வறுமையைப் பயிற்சிப்போம்.

இறுதியாக, இரக்கம், இதயப் பரிசுத்தம், துன்புறுத்தலைச் சகித்தல், கோபத்தைக் கட்டுப் படுத்துதல், விபச்சாரம், பழிவாங்குதல், கவலை, கனிகொடுத்தல், இறைச்சித்தம் போன்றவை குறித்து இயேசு சொன்னதையும் சாதித்ததையும் தியானித்து, நாமும் செய்யத் தீர்மானிப்போம். நமது வாழ்வே புதுப் பொலிவு பெறும்!

www.lilianstanley.com